<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

வா.சா. 1 தேதி.11.03.2024

| OS.No. | 313/2022 | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பந்தம் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

மயிலாடுதுறை கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ எண்.60/2017 என்ற வழக்கினை நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அதில் சர்வே எண். 328/2 ல் உள்ள புஞ்சை நிலமும், போர் பம்பு செட்டும் எனக்கு சொந்தமானது என்று நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 328/2 ல் 26 சென்ட் நிலம் உள்ளது. மேற்படி வழக்கினை இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக தான் தாக்கல் செய்திருந்தேன். மேற்படி வழக்கானது தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். தள்ளுபடி ஆன பிறகு அந்த வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்ள நவம்பர் 2021ல் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவினை எனது வழக்கறிஞர் திரு. சேயோன் அவர்கள் மூலமாக தான் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் இடைகால மனு தற்போதுவரை நிலுவையில் தான் உள்ளது. ஆக அந்த வழக்கின் சொத்து இதுவரை என்னுடையது என்று உறுதியாக வில்லை என்றால் மனு நிலுவையில் உள்ளது. முதலில் இந்த நிலம் அகோரம் பிள்ளை என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். இந்த நிலத்தின் நான்கு எல்லைகளை குறிப்பிட்டு கலியமூர்த்தி என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் நான்கு எல்லை மற்றும் சர்வே எண்னை தவறாக பயன்படுத்தி கிரயம் பெற்றுள்ளார். கலியமூர்த்தி அகோரம் பிள்ளை என்பவரிடம் இருந்து தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அவர் 335/2–னை கிரயம் பெற்றுள்ளார். ஜெயராமன் என்பவர் சர்வே எண். 328/2 தனக்கு தான் சொந்தம் என்று கலியமூர்த்திக்கு எதிராக ஒரு வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான்கு எல்லை

சரியாக உள்ளது என்றும், சர்வே எண் தான் தவறாக எழுத்து பிழையாக உள்ளது என்று அந்த வழக்கினை தள்ளுபடி செய்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சர்வே எண்.328/2 இடத்தினை பிரதிவாதியின் தகப்பனார் கிரயம் பெற்றுவிட்டார் என்றால் சர்வே எண்.335/2 இடத்தை தான் கிரயம் பெற்றார். அதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் கலியமூர்த்தியின் மீது அ.வ. எண்.53/92 என்ற வழக்கில் இந்த தாவா இடம் எனது வசம் மற்றும் அனுபவத்தில் உள்ளதாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கினை தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால் வாதிக்கு அந்த சொத்து சொந்தம் என்றும் சொத்தின் வசம் பிரதிவாதியிடம் உள்ளதாக சொல்லி நிரந்திர உறுத்துக் கட்டளை வழங்கி தள்ளுபடி செய்துவிட்டார்கள். 328/2 சர்வே எண்ணுடன் மற்றும் சில சொத்துக்களையும் சேர்த்து நான் அந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் இந்த பிரதிவாதி சர்வே எண்.328/2 சொத்திற்கு மட்டும் ஆட்சேபித்து எதிர்கட்சி செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கினை தான் தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் மீது நான் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே சொத்தினை 01.11.1991–ல் பால்ரத்தினம் கிரயம் பெறுகிறார் என்றால் சரிதான். 328/2 என்ற சர்வே எண் கொண்ட சொத்து சம்பந்தமாக நான் அது எனக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு விசாரணை நின்னிலம் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது நின்னிலம் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.சா.ஆ. 1, 2 ஆகும். மேற்படி தீர்ப்பில் நான்கு எல்லை என்றும், சர்வே எண். தவறாக உள்ளதை கொண்டு நான் சாதகமாக எடுத்து வழக்காடுவதாக தீர்மாணிக்கப்பட்டுள்ளது என்றால் அதில் பிரதிவாதியின் முதல் நிலை சாட்சியத்தை ஏற்றுக் கொண்டு பிரதிவாதியின் வசத்தில் தான் சொத்து உள்ளது என்று தீர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்த சொத்தை பிரதிவாதியிடம் இருந்து தான் பால்ரத்தினம் கிரயம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். நின்னிலம் நீதிமன்ற தீர்ப்பின் மீது நான் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். பால் ரத்தினம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரின் மகன் 5 ஆம் பிரதிவாதி ஆவார். 5 ஆம் பிரதிவாதியின் மீது தான் மயிலாடுதுறை, கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் (அ.வ. எண். 60/2017) நான் அந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிய இடைநிலை மனு நிலுவையில் உள்ள நிலையில்

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது இவ்வழக்கில் சர்வே எண்கள்.328/2 மற்றும் 328/4ல் ஆகிய சொத்துகளுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.328/2க்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் சர்வே எண்.328/4ன் சங்கதிகளை பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 328/4 நஞ்சை நிலம் ஆகும். நஞ்சை நிலத்தில் தேக்கு மரங்கள் பயிரிட முடியாது என்றால் சரிதான். சர்வே எண். 328/4ல் நஞ்சை நிலத்தில் தேக்கு மரம் பயிரிட்டுள்ளதாக சொல்வது தவறு என்றால் சரிதான். சர்வே எண். 328/4ல் பிரதிவாதி எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 328/2 ல் பிரதிவாதி அவருடைய நிலத்தில் தான் தேக்கு மரம் போட்டிருந்தார்கள் என்றும், நான் தவறாக எனது நிலத்தில் உள்ள மரத்தினை அவர்கள் வெட்டி விட்டார்கள் என்று பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் தனது நிலத்தில் நட்டிருந்த தேக்கு மரங்களின் கிளைகளை அவற்றின் வளர்ச்சிகாக கழித்தல் வேலை நடந்த போது நான் எனது இடத்தில் அவர் வெட்டிவிட்டதாக தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 01.06.2016ல் மரம் வெட்டியதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் 12.10.2022 ல் 6 வருடம் கழித்து தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மணல்மேடு காவல் நிலையத்தில் சம்பவம் நடந்த உடன் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு போடும் போது எவ்வளவு மரம் வெட்டப்பட்டிருந்தது என்று நீதிமன்றம் மூலம் ஆணையர் வைத்து பார்த்தேனா என்றால் இல்லை. எத்தனை மரங்களின் எத்தனை கிளைகள் வெட்டப்பட்டது என்றும், அவற்றின் மதிப்பு என்ன என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை கன அடி மரங்கள் வெட்டப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டு பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அது பாரஸ்டு அலுவலர்களுக்கு தான் தெரியும். அவர்கள் எழுதிக் கொண்டார்கள். பிரதிவாதி வெட்டி எடுத்து சென்றுவிட்டதால் அதன் பொருமானம் எனக்கு தெரியவில்லை. வனத்துறையில் என்ன அளவுகள் அளந்தார்கள், எத்தனை துண்டுள்ளதாக உள்ளது என்று என்னிடம் கணக்கு இல்லை என்றால் சரிதான். எனக்கு தேக்கு வளர்த்த இடத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனது பிராது காலவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கினை தாக்கல் செய்தால் பிரதிவாதி தாவா இடத்தை விட்டு ஓடிவிடுவார் என்ற நம்பிகையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ஜெயராமனும் சேர்ந்து பிரதிவாதியின் மீது நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம்

என்றும், அவற்றில் எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.